# மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு கிகா விருது

சென்னை, மார்ச் 2: சர்வதேச தரத்தில் கட்டமைப்பை மேம்படுத்தி, பயணிகளுக்கு வசதிகளை அளிப்பதில் புதுமைகளைப் புகுத்திய சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு புதிய கண்டுபிடிப்புக்கான கலாம் அரசு விருது (கிகா) வழங்கப்பட்டுள்ளது.

புதுமை மற்றும் சிறந்த நிர்வாகத் திறனுக்கு விருதுகள் வழங்கும் விழா மற்றும் டாக்டர் அப்துல்கலாம் 3-ஆவது நினைவு மாநாடு தில்லியில் கடந்த 28-ஆம் தேதி நடைபெற்றது. இதில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு புதிய கண்டுபிடிப்புக்கான கலாம் அரசு விருது (கிகா) வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்ட திட்டத்தில் சர்வதேச தரத்தில் கட்டமைப்பை மேம்படுத்தி புதுமைகளைப் புகுத்தி, பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மின்சாரத்தை சேமிக்கும் வகையில், தொழில்நுட்பம் உட்புகுத்தல், இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தில் சிறிய மெட்ரோ ரயில்நிலையங்கள் அமைத்தல், நகர கட்டமைப்பு உருமாற்றம் போன்ற சிறந்த நிர்வாகத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக, இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை சென்னை மெட்ரோ நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால், தலைமை பொதுமேலாளர் வி.கே.சிங் ஆகியோரிடம் நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ்குமார் வழங்கினார்.